அடையாள இலக்கம்:

**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2011**

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 1

<u>மத்தியபிரிவு</u>
(8-9 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 1.00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

**அ) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தால் நிரப்புக.**
**புள்ளிகள் 10**

1) மா --- பழம்

2) வட் --- மேசை

3) புத ---- கிழமை

4) சித்திரை --- தம்

5) க --- தரிக் காய்

6) வான --- ல்

7) நி ---- ங்கள்

8) வ ---- ப்பந்தாட்டம்

9) க ----- காம்பரப்பூ

10) தொ ------- நோக்கி

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) கீழே கோடிடப்பட்ட சொல்லுக்கு வாக்கியத்திற்கேற்ற *<u>ஒத்த கருத்துள்ள</u>* சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.** **புள்ளிகள்: 10**

1) நம் உடல் ஓய்வு பெற, போதிய **<u>உறக்கம்</u>** அவசியம்.
   1) உடற்பயிற்சி 2) சத்துணவு
   3) நித்திரை 4) உற்சாகம் (…………………………...)

2) நமது சுற்றுப் புறத்தை நாம் **<u>சுத்தமாக</u>** வைத்துக் கொள்ள வேண்டும்.
   1) அழகாக 2) உயர்வாக
   3) துப்புரவாக 4) தாழ்வாக (…………………………...)

3) தீய பழக்கங்களை நாம் **<u>அறவே</u>** ஒழிக்க வேண்டும்.
   1) முற்றிலும் 2) எல்லோரும்
   3) எப்பொழுதும் 4) எங்கும் (…………………………...)

4) போரில் **<u>உயிர்நீத்தவர்களின்</u>** எண்ணிக்கை பல்லாயிரம் என்று அறிந்தோம்.
   1) சண்டையிட்டவர்களின் 2) வீரர்களின்
   3) காவலரின் 4) இறந்தவர்களின் (…………………………...)

5) அம்மா சொன்ன சோகக் கதையைக்கேட்டு நான் மிகவும் **<u>வருந்தினேன்.</u>**
   1) நகைத்தேன் 2) அழுதேன்
   3) சந்தேகப்பட்டேன் 4) கவலைப்பட்டேன் (…………………………...)

| புள்ளிகள் | |
|---|---|

## இ) அடைப்புக்குறிக்குள் இருந்து சரியான பதிலைத் தெரிந்து கோட்டின் மேல் எழுதுக.

**புள்ளிகள்: 15**

1) ஔவையார் எழுதிய நூல் எது?

   (திருக்குறள், சிலப்பதிகாரம், நல்வழி) (…………………………...)

2) வயிற்றுப் பையிலே தனது குட்டியை வைத்திருக்கும் விலங்கு எது?

   (யானை, பூனை, கங்காரு) (…………………………...)

3) புதிய நெல்லை அறுவடைசெய்த உழவர் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் பண்டிகை எது?

   (தீபாவளி, தைப்பொங்கல், வாணிவிழா) (…………………………...)

4) வானவில்லில் உள்ள நிறங்கள் எத்தனை?

   (ஒன்பது, ஏழு, ஆறு) (…………………………...)

5) தமிழர்கள் விருந்து கொடுக்கும் பொழுது படைக்கப்படும் பல சுவைகொண்ட பூரண உணவை எப்படி அழைப்பீர்கள்?

(அறுசுவை உணவு , எழுசுவை உணவு, எண்சுவை உணவு)( ……………………….)

| புள்ளிகள் | |
|---|---|

## ஈ) பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க.

**புள்ளிகள்: 15**

1) மரத்திலிருந்து பழுத்த இலைகள் …………………………...
2) கோகிலாவின் பொம்மை …………………………...
3) மந்திரவாதிகள் காட்டிய வித்தைகள் அனைவரையும் …………………………...
4) மாதவன் என்னைப் பார்த்துச் …………………………...
5) கொடிய மிருகங்கள் அடர்ந்த காடுகளில் …………………………...

| புள்ளிகள் | |
|---|---|

அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2010

# எழுத்தறிவுப் போட்டி – பகுதி 2

<u>மத்தியபிரிவு</u> (8-9 வயதுப் பிரிவு)

**ஈ) கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைக் கொண்டு 20 வெவ்வேறு சொற்களை உருவாக்குக. நீங்கள் உருவாக்கும் சொல் ஒன்றில் ஒரு எழுத்தை <u>ஒரு தடவை மாத்திரமே பயன்படுத்தலாம்</u>.**

<u>புள்ளிகள்: 20</u>

அ ப் சி ச ம் வ
ம ல் ட க த
லை ர பா ச்

1……………………………..

2……………………………..

3…………………………….

4…………………………

5…………………………

6………………………….

7………………………….

8…………………………

10……………………………

11………………………………….

12…………………………………..

13……………………………………

14…………………………………..

15…………………………………..

16………………………………….

17……………………………………

18 ………………………………….

20……………………………………

| புள்ளிகள் | |
|---|---|

**உ) கீழே தரப்பட்ட சிறிய கதையை வாசித்தபின் கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களை எழுதுக.**

**புள்ளிகள்: 30**

காட்டுக்கு அரசனான சிங்கம் ஒன்று தனது குகைக்கு அருகில் நித்திரையாய் இருந்தது. குகைமேல் இருந்து துள்ளிய ஒரு சிறிய சுண்டெலி தவறுதலாகச் சிங்கத்தின் மேலே விழுந்துவிட்டது. நித்திரை கலைந்த சிங்கமோ கோபத்துடன் சுண்டெலியைப் பார்த்துக் கர்ச்சித்தது. சிங்கத்தின் கோபத்தைக் கண்ட சுண்டெலி பயத்துடன் சிங்கத்திடம் மன்னிப்புக் கேட்டது. இரக்கப்பட்ட சிங்கமும் 'சரி இங்கிருந்து ஓடிப்போ' என்று உறுமியது.

"எங்கள் காட்டு அரசனே! இந்த உதவியை நான் என்றும் மறவேன்" என்று சொல்லிக்கொண்டே சுண்டெலியும் ஓடிச்சென்றது. ஒரு நாள் இரைதேடிச் சென்ற சிங்கம் வேடன் ஒருவன் விரித்திருந்த வலைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அந்த வழியே வந்த சுண்டெலி சிங்கத்தைப் பார்த்தது. உடனே அது ஓடிச்சென்று வலையைத் தனது சிறிய பற்களால் கடித்து நறுக்கி விட்டது. சுண்டெலியின் உதவியால் சிங்கம் உயிர் பிழைத்தது. "நான் செய்த உதவியை நீ மறக்கவில்லையே" என்று நன்றியுடன் சுண்டெலியைப் பார்த்தபடி சிங்கம் சென்றது.

1) இந்தக் கதைக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றை எழுதுக?

……………………………………………………………………..

2) சிங்கத்தின் நித்திரையைக் குழப்பியது யார்?

……………………………………………………………………..

3) கர்ச்சித்த சிங்கத்தைப் பார்த்துச் சுண்டெலி என்ன சொன்னது?

……………………………………………………………………..

4) எலி சிங்கத்திற்கு எவ்வாறு உதவியது?

……………………………………………………………………..

5) இக்கதையால் நீங்கள் அறிந்தது (படிப்பினை) என்ன?

……………………………………………………………………..

| **புள்ளிகள்** | |
|---|---|

| **மொத்தப் புள்ளிகள்** | |
|---|---|